உதகையில் மண்வள பரிசோதனை ஆய்வுக்கூடம்.

*487. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகமண்டலத்தில் மண்வள சோதனை ஆராய்ச்சிக் கூடம் ஒன்று நிறுவப்படவிருக்கிறதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லை.

இந்தியா-ஜெர்மனி திட்டத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கென்றே மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்று உதகமண்டலத்தில் உள்ளது. நீலகிரி மாவட்டத்திற்கான மண்வளப் பரிசோதனைப் பணிகளை கோயம்புத்தூரில் உள்ள மண்வளப் பரிசோதனை ஆய்வுக் கூடம் கவனித்து வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிப்பு.

*488. வினா—திரு. சி. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலங்களின் பரப்பளவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தஞ்சை மாவட்டத்தில் 1970-ம் ஆண்டில் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்பட்ட நிலப்பரப்பின் அளவு 58,900 ஏக்கர்.

திரு. சி. கணேசன் : இந்த ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை மாவட்டத்திலுள்ள சில விவசாயிகள் விரும்புவதில்லை. காரணம் இதை விட விசைத் தெளிப்பான்கள் மூலம் தெளிப்பதுதான் பலன் தருகிறது என்று கருதுகிறார்கள். ஆனால் அரசுத் துறை அதிகாரிகள் ஹெலிகாப்டர் மூலம் பூச்சி மருந்து தெளிக்க வேண்டுமென்று ஆங்காங்குள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களைக் கேட்கிறார்கள். அதற்குரிய கட்டணத்தை வசூல் செய்யும்போது அதை விவசாயிகள் எதிர்க்கத் தலைப்படுகிறார்கள். அரசாங்கம் என்ன கருதுகிறது? ஹெலிகாப்டர் மூலம் மருந்து தெளிப்பது பலன் அளிப்பதாக அரசு கருதுகிறதா? அதைக் கட்டாயப்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதை அரசு எந்த ஊராட்சிமன்றத் தலைவர்கள் பேரிலும் அல்லது விவசாயிகள் பேரிலும் கட்டாயமாகத் திணிப்பதில்லை. அப்படித் தெளிப்பதற்கு முன்பு ஊராட்சி ஒன்றியங்கள் அனுமதி பெற்று அதற்குப் பிறகு அனுமதி வழங்கிய ஒன்றியங்களில்தான் தெளிக்கப்பட்டு வருகின்றன. பொதுவாக தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் விமானம் மூலம் தெளிப்பதன் மூலம் உணவு உற்பத்தி பெருக்கப்பட்டிருக்கிறது என்பது நன்கு தெரியும். எனவே அந்த வகையில் விமானம் மூலம் தெளிப்பதில் அரசு யாரையும் கட்டாயப்படுத்தாமல் அதை ஒரு முறையாக வைத்திருக்கிறது.